# கலாதீபம்

கலாதீபம் (Sinhala)

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.02.2024 | தீபம் 20


# பண்பாட்டுப் பொங்கல் விழாவுடன் இனிதே ஆரம்பமாகியது கலாசாலையின் புதிய கல்வி ஆண்டு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்ற பண்பாட்டுப் பொங்கல் விழா 17.01.2025 காலை கலாசாலையில் அமைந்துள்ள சரஸ்வதி சிலைக்கு முன்பாக கலாசாலையின் நுண்கலை மன்ற ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது பொங்கலுக்குரிய பண்பாட்டு அம்சங்கள் எவை அவற்றைப் பேணும் நடைமுறைகள் தொடர்பான விளக்கத்தினை கலாசாலையின் அதிபர் அவர்கள் படிமுறையாக கூறினார். சம நேரத்தில் அதிபருடைய வழிப்படுத்தலின் வழி பொங்கல் விழா முன்னெடுக்கப்பட்டது.

அதனை அடுத்து முற்றத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்நிகழ்வுகளை ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர் திரு கு.பாலசண்முகன் அவர்கள் நெறிப்படுத்தினார்.

முதலாவது நிகழ்வாக பிரதிஅதிபர் திரு த.கோபாலகிருஷ்ணன் அவர்களும் நுண்கலை மன்றக் காப்பாளர் செல்வி ரஜிதா சின்னதுரை அவர்களும் வாழ்த்துரைகளை வழங்கி இருந்தனர். தொடர்ந்து விரிவுரையாளர் திரு வேல் நந்தகுமார் அவர்களின் கவிதை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து ஆசிரிய மாணவர்களின் தைப்பொங்கல் பற்றிய உரைகளும் கவிதையும் இடம்பெற்றன.









01.01.2024 — 31.01.2024 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவார்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**
செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)


கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

## புது வருடத்தில் யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் தைப்பொங்கல் விழா

கலாசாலையில் அமைந்துள்ள யோகாம்பிகா சமேத யோகலிங் கேஸ்வரர் ஆலயத்தில் 15.01.2024 அன்று காலை பொங்கல் விழா கலாசாலையின் இந்து மன்ற ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.







# கலாதீபம்

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### கலாசாலைகளை புதிய பாதைக்கு இட்டுச் செல்லல்

இலங்கையில் கல்விசார் பல்கலைக்கழகம் மத்திய கல்வி அமைச்சின் கீழ் அமைக்கப்படவுள்ளது. 19 தேசிய கல்வியியல் கல்லூரிகளையும் இணைத்து மகரகம கல்வியியல் கல்லூரியை முதன்மை ஸ்தானமாக கொண்டு இலங்கை கல்வியியல் பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதற்கான திட்டவரைபுகள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

பல்கலைக்கழகம் அமைப்பதற்கான முதல்கட்ட நிதி பாராளுமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளது. அடுத்த அடுத்த மாதங்களில் பல்கலைக்கழகங்களுக்கான வரைபு மற்றும் கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய வரைபு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படவேண்டும். பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட பின்னர் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை என்பதற்கான தேவை இல்லாமல்போகும் என்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என்ற பதவி நிலையில் அவர்கள் உள்வாங்கப்படுவர் என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில் இலங்கையில் தற்போதுள்ள எட்டு ஆசிரியர் கலாசாலைகள் எதிர்காலத்தில் எவ்வகையான உரு மாற்றத்தை பெறும் என்பது குறித்து தெளிவான திட்டங்கள் காணப்படுவதாக இல்லை. அவை கல்வியியல் கல்லூரிகளுடன் இணைக்கப்படலாம் என சிலர் எதிர்பார்க்கின்றனர். வேறு சிலர் இலங்கை கல்விசார் பல்கலைக்கழகத்தின் ஒரு பீடமாக இவை செயற்படலாம் என எதிர்வு கூறுகின்றனர். இன்னும் சிலர் இந்த கட்டிடங்களை வேறு தேவைகளுக்கு பயன்படுத்தலாம் என முன்மொழிகின்றனர்.

எவ்வாறு எனினும் ஒரு பாடசாலையை மூடுவது 100 சிறைச்சாலைகளை திறப்பதற்கு ஒப்பானது என்ற கருத்துடன்தான் கலாசாலைகளை மூடும் படலத்தையும் இணைத்து பார்க்கவேண்டி உள்ளது. ஒரு நிறுவனத்தை ஆக்குவது என்பது மிகக் கடினமானது அழிப்பது என்பது மிகச் சுலபமானது.

இலங்கையில் இந்த ஆண்டு மூன்று கலாசாலைகளே செயர்பாட்டு நிலையைப் பெற்றுள்ளன. கோப்பாய், கம்பொல, உணவட்டுண ஆகிய இடங்களில் உள்ள கலாசாலைகள் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களுடன் இயங்குகின்றன. ஏனைய மட்டக்களப்பு, அட்டாளாளச்சேனை, கொட்டகல, கிராகம, பலப்பிட்ட்டிய ஆகிய ஐந்து கலாசாலைகளும் மாணவர்களின்றிய முடக்க நிலையில் உள்ளன. அதன் விரிவுரையாளர்கள் அருகில் உள்ள ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையங்களுக்கும் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கும் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலை இவ்வாறு தொடர்வது ஆரோக்கியமானதல்ல. கல்வியை வழங்கும் நிறுவனங்களுள் கலாசாலைகள் மூத்தவை தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரை கண்ணீராலே காத்தோம். கருகத் திருவுளமோ என்றே கேட்கத்தோன்றுகிறது. நம் மூதாதையர் நம் மண்ணின் கல்விக் கனவுடன் பல சவால்களை எதிர்கொண்டு இந்த நிறுவனங்களை ஸ்தாபித்து வளர்த்துள்ளனர். எனவே இவை தமது பெயரை மாற்றமுறச் செய்யாது ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி நிறுவனங்களாக புதிய செல்நெறியை பெற்று பின்பற்ற வேண்டியது அவசியமானது.. கல்விசார் ஆர்வலர்கள் கவனம் எடுக்கவேண்டிய விடயம் இதுவாகும்.

**காப்பாளர்**

## கலாசாலையில் இருந்து கடந்த 05.01.2024 அன்று இளைப்பாறிய திரு சீவரத்தினம் தங்கவேல் மறைந்து விட்டார்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்விசாரா பணியாளராக சேவையாற்றி கடந்த 08.01.2024 அகவை 60 எய்தி மணி விழாக் கண்டு ஓய்வு பெற்ற திரு சீவரத்தினம் தங்கவேல் அவர்கள் 13.01.2024 காலமாகிவிட்டார்.

அவரது இறப்பினால் துயருறும் மனைவி இரண்டு பிள்ளைகள் மற்றும் குடும்ப உறவுகள் நண்பர்கள் அனைவருக்கும் எமது கலாசாலையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

**கடந்த ஆண்டு தேசிய கல்வி நிறுவகத்தால் ஆசிரிய மாணவர்களுக்கு (2021/2022) நடைபெற்ற உள்ளகப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு 17.01.2024,18.01.2024 ஆகிய இருதினங்களிலும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்றதாக அதிபர் தெரிவித்தார்.**

# News in Brief - Month of January

**01.01.2024**

**The New Year celebration** was held at Kopay Teachers' College at 9 am under the leadership of Principal Mr S,Laleeson.

**08.01.2024**

**Service Appreciation Ceremony**

Mr. S.Thangavel worked as a non -acadmic officer at Kopay Teachers' College. Retired from government service with effect from 05.01.2024 Friday. On Monday 08.01.2024 was his 60th birthday.

**10.01.2024**

**Service Appreciation Ceremony**

The ceremony was held Dr. Subramaniyam Paramanandham President (Jaffna National College of Education) who was completed his service on 15.01.2024.

The President of JNCoE was honored by garlanding flowers and wearing a bonnet by the Lecturers guild and gave a felicitation plaque by the college Principal Mr S.Laleeson.

Similarly, non-academic staffs, 1st and 2nd year teacher trainees were honored by the President of JNCoE.

**17.01.2024**

**Cultural Pongal Festival**

It was held in the morning front of Kopay Teachers' College. During this, the college principal was gave a step-by-step explanation of the cultural aspects of Pongal.

The event was moderated by Mr. K.Balashanmugan, Lecturer of Teachers' College. The speeches were delivered by Deputy Principal Mr. T. Kopalakrishnan and Ms. Rajitha Sinnadurai, Petron of Fine Arts Union. Lecturer Mr. Vel. Nandakumar recited a poem. This event was organized by Fine Arts Union of KTC.

**17.01.2024**

**Welcome Party** was celebrated on Wednesday evening at Kopay Teachers' College for the newly appointed teacher trainees for the academic year 2023/2024 by the second year teacher trainees of the college. The event was presided over by Mr. S. Laleeson, Principal of KTC,

**24.01.2024**

**Wednesday Assembly**

It was held on Wednesday at Rathilakshmi hall under the leadership of Mr. K. Senthilkumaran, Deputy Principal started at 8.30 am.

The event was conducted by First year science course teacher trainees. The event was moderated by Mr. Iragunathan Senthur selvan. Miss Anjalose Brlini Thirumaran - first year teacher trainee, was delivered speech on the topic of International Educational Day.

The lecture speech was delivered by Mr. T. Kopalakrishnan, Deputy Principal of the College.

**31.01.2024**

**Wednesday Assembly**

It was held on Wednesday at Rathilakshmi hall under the leadership of Mr. K. Senthilkumaran, Deputy Principal started at 8.30 am.

The event was conducted by First year teacher trainees of Mathematics, English, Special Education and Physical Education. The event was moderated by Mrs. S.F. Nuzla.1st year maths course teacher trainee S.Senthirakumar was delivered a speech on the topic of leprosy. The Guest introductory speech was delivered by the lecturer Mr. K. Balashanmugan.

Guest Speaker Mr. K. Anushan - Tutor Public Health Inspector, RTC Jaffna was delivered leprosy awareness speech.

# 35 ஆண்டுகளாக கல்விச்சேவையாற்றி அரச பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம்

15.01.2024 ஆம் திகதி தனது சேவையினை நிறைவாக நிறைவேற்றிக் கொள்ளும் கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் பீடாதிபதி (யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி) அவர்களுக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பணி நயப்பு விழா முன்னெடுக்கப்பட்டது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் திரு ச.லலீசன் தலைமையில் 10.01.2024 அன்று பிற்பகல் கலாசாலை ரதிலக்சுமி மண்டபத்தில் பணி நயப்பு விழா ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்தம் பாரியார் திருமதி மாலதி பரமானந்தம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

ஏறக்குறைய 35 வருடகால கற்பித்தல் சேவையினை நிறைவு செய்கிறார் பீடாதிபதி அவர்கள்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி ஆகிய இரு நிறுவனங்களும் இணைந்து பணியாற்ற உறுதுணையாக இருந்தவர்.

இவரது சேவையினை கௌரவிக்குமுகமாக ஆசிரியர் கலாசாலையின் அதிபர் மற்றும் பிரதிஅதிபர்கள் உபஅதிபர் மாணவர்மன்ற காப்பாளர்கள் விரிவுரை யாளர்கள் மற்றும் கல்விசாரா பணியாளர்கள் தமது உள்ளப்பதிவினை வாழ்த்துரையாக வழங்கி கௌரவித்தனர்.

அத்துடன் ஆசிரிய மாணவர்கள் சார்பில் இரண்டாம் வருட ஆரம்ப கல்வி ஆசிரிய மாணவி வாழ்த்துரை வழங்கினார்.

விரிவுரையாளர் கழகத்தினால் மலர் மாலை அணிவித்தும் பொன்னாடை போர்த்தியும் அதிபர் அவர்கள் யாத்த வாழ்த்துமடலினை வழங்கியும் பீடாதிபதி அவர்கள் கௌளரவிக்கப்பட்டார்.

அதேபோல் கல்விசாரா உத்தியோகத்தர்களும் முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களும் பீடாதிபதி அவர்களை கௌரவித்தனர்.

ஏற்புரையினை நிகழ்த்திய பீடாதிபதி அவர்கள் நேர் உள மனப்பாங்கு பற்றியும் அது தனது வாழ்க்கையில் செலுத்திய பங்களிப்பு பற்றியும் கூறினார். கலாசாலையில் கணித பாடத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியராக தொடங்கி கலாநிதி பட்டம் பெற்றமை வரை தனக்கு உறுதுணை புரிந்த கடவுளுக்கு நன்றி கூறினார்.

நிறைவாக தேநீர் விருந்து உபசாரத்துடன் விழா சிறப்பாக நிறைவு பெற்றது.












# புதிதாக இணைந்துகொண்ட 2023/2024 ஆசிரிய மாணவர்களுக்கான வரவேற்பு உபசார விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 2023/ 2024 கல்வி ஆண்டிற்கென புதிதாக அனுமதி பெற்ற ஆசிரிய மாணவர்களுக்காக கலாசாலையின் இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் முன்னெடுத்த வரவேற்பு உபசார விழா 17.01.2024 மாலை இடம் பெற்றது.

கலாசாலையின் அதிபர் திரு சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதலில் தேசியக் கொடியும் கலாசாலைக் கொடியும் ஏற்றி வைக்கப்பட்டன.

தொடர்ந்து முதலாம் வருட புதிதாக நியமனம் பெற்ற ஆசிரிய மாணவர்கள் இரண்டாம் வருட ஆசிரியர் மாணவர்களாலும் விரிவுரையாளர் களாலும் கலாசாலையின் பிரதான மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் தலைமை உரை வாழ்த்துரைகள் என்பவற்றைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன..

03.01.2024 தொடக்கம் 12.01.2024 வரை திசை முகப்படுத்தல் பயிற்சி ஆசிரியர் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராக கலாசாலை யின் விரிவுரையாளர் திரு த.தவசேகர் அவர்கள் கடமையாற்றினார்.













# புதன் ஒன்றுகூடல்களின் தொகுப்பு

## 03.01.2024

கலாசாலையின் பிரதி அதிபர் திரு க.செந்தில்குமரன் அவர்கள் தலைமையில் காலை 8.30 மணிக்கு ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமாகியது.
இரண்டாம் வருட ஆரம்பக்கல்விநெறி, விசேட கல்விநெறி,2NL ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வை முன்னெடுத்துச் சென்றனர்.
திருமதி அஸ்மிதா பேகம் தலைமையேற்று நடத்தினார்.
இரண்டாம் வருட விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி திருமதி M.I.F.சப்னா உலக பார்வையற்றோர் பிரயிலி தினம் எனும் தலைப்பில் ஆசிரிய மாணவர் உரையினை ஆற்றினார்.
விரிவுரையாளர் உரையினை கலாசாலையின் விரிவுரையாளர் திரு வே.சேந்தன் அவர்கள் ஆசிரியர் தொழில் மீளாய்வில் உட்படுத்தல் கல்வியினதும் செயல்நிலை ஆய்வினதும் வகிபங்கு என்னும் தலைப்பில் உரை ஆற்றினார்.









## 24.01.2024

கலாசாலையின் பிரதி அதிபர் திரு க.செந்தில்குமரன் அவர்கள் தலைமையில் காலை 8.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகியது.
முதலாம் வருட விஞ்ஞானநெறி, ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வை முன்னெடுத்துச் சென்றனர்.
திரு இரகுநாதன் செந்தூர்செல்வன் தலைமையேற்று நடத்தினார். முதலாம் வருட ஆசிரிய மாணவி செல்வி அஞ்சலோஸ் பெலின் திருக்குமாரன் சர்வதேச கல்வி தினம் எனும் தலைப்பில் ஆசிரிய மாணவர் உரையினை ஆற்றினார்.
விரிவுரையாளர் உரையினை கலாசாலையின் பிரதி அதிபர் திரு த.கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆற்றினார்.







# புதன் 31.01.2024 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளராக திரு கடாச்சம் அனுசன் ~போதனாசிரியர், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

புதன் ஒன்றுகூடல் கலாசாலையின் பிரதி அதிபர் திரு க.செந்தில்குமரன் அவர்கள் தலைமையில் காலை 8.30 மணிக்கு ரதி லக்சுமி மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமாகியது. தை மாத இறுதி ஞாயிற்றுக் கிழமை உலக தொழுநோய் தினம் அனுட்டிக்கப்பட்டது. அதனை முன்னிலைப் படுத்தும் நிகழ்வாக 31.01.2024 புதன் ஒன்றுகூடல் அமைந்திருந்தது.

முதலாம் வருட கணித, ஆங்கில, விசேட கல்வி, உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வை முன்னெடுத்துச் சென்றனர்.

திருமதி சு.பா.நுஸ்கா நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார்

முதலாம் வருட கணிதநெறி ஆசிரிய மாணவன் செ.சந்திரகுமார் தொழுநோய் எனும் தலைப்பில் ஆசிரிய மாணவர் உரையினை ஆற்றினார்.

அதிதி பேச்சாளர் பற்றிய அறிமுக உரையினை விரிவுரையாளர் திரு கு.பாலசண்முகன் அவர்கள் ஆற்றினார்.

அதிதி பேச்சாளர் திரு க.அனுசன் - போதனாசிரியர் பொதுச் சுகாதார பரிசோதகர் அவர்கள் தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு விசேட உரையினை ஆற்றினார். அவர் தனது உரையினை காணொளி மூலமாக அளிக்கைப்படுத்தினார்.

நிறைவாக அதிதி அவர்கள் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

நிறைவாக பிரதி அதிபர் அவர்களின் நன்றியுரை இடம்பெற்றது.













# பணிநயப்புவிழா
# கல்விசாரா சேவை உதவியாளர் (அமரர்) திரு சீவரத்தினம் தங்கவேல்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கல்விசாரா பணியாளர் திரு சீவரத்தினம் தங்கவேல் அவர்களின் பணிநயப்பு விழா ஆசிரியர் கலாசாலையின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி வதனி கேதாரநாதன் தலைமையில் 05.01.2024 அன்று ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு தமது பாரியாருடன் வருகை தந்திருந்த திரு சீ..தங்கவேல் அவர்களை கலாசாலை வாயிலிலிருந்து மண்டபத்திற்கு அதிபர், பிரதிஅதிபர்கள், உபஅதிபர், மன்றக் காப்பாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசாரா பணியாளர்கள், ஆசிரிய மாணவர்கள் மாலை அணிவித்து மண்டபத்திற்கு அழைத்துவந்தனர். மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

திரு சீ. தங்கவேல் அவர்கள் 01.05.1993 அன்று சேவை உதவியாளராக பலாலி ஆசிரியர் கலாசாலையில் தனது சேவையினை தொடங்கினர்.

பின்னர் 11.11.2015 இருந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தனது பணியினை ஆரம்பித்தார். 1983 ஆம் ஆண்டு தொடக்கம் அமைய அடிப்படையில் சுமார் 10 வருடங்களும்

1993 தொடக்கம் நிரந்தர நியமனம் பெற்று 30 வருடங்கள் தனது சேவையினை நிறைவாக ஆற்றி (எல்லாமாக 40 ஆண்டுகள்) ஓய்வினை பெறுகின்றார். இதனையொட்டி கலாசாலை கல்விசாரா உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் மணிவிழா இடம்பெற்றது.

மணிவிழாவின் போது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சு.பரமானந்தம் அவர்களும் கலந்து கொண்டு விழா நாயகரை வாழ்த்தினார்.

மணிவிழா நாயகன் தனது உரையில் கலாசாலை மீது கொண்ட பற்றினை வெளிப்படுத்தினார்.

கலாசாலை நிறைவில் கலாசாலை அதிபரும் கல்விசாரா அலுவலர்களின் பிரதிநிதிகளும் விழா நாயகரை வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.











# உலக பார்வையற்றோர் பிரய்லி தினம்

இத்தினம் தை மாதம் 4ம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இதன் சிறப்பை எடுத்து நோக்குவோமேயானால் எண்ணும் எழுத்தும் கண்ணென தகும் என்கிறார் ஒளவையார் கொன்றை வேந்தனில், ஆனால் கண்பார்வை இல்லாதவர்களிடத்தேயும் எண்ணையும் எழுத்தையும் கொண்டு சேர்த்தவர் லூயியஸ் பிரய்லி ஐ.நா. சபையானது 2019ம் ஆண்டு தை மாதம் 4ம் திகதியே இத்தினத்தை பிறகடனப்படுத்தியது.______பார்வையற்றோர் படிக்க உதவும் பிரய்லி எழுத்து முறையை கண்டறிந்த லூயியஸ் பிரய்லி பிறந்த தினமான தை மாதம் 4ம் திகதியன்று அவர் நினைவாக சர்வேதச பிரய்லி தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. லூயியஸ் பிரய்லி 1809ம் ஆண்டு ஜனவரி 04ம் திகதி பிரான்ஸில் பிறந்தார். இவர் தனது 03 வயதில் கண் பார்வையை இழந்தார். தனது 10வது வயதில் ROYAL INSTITUTE FOR BLIND YOUTH என்கிற பார்வையற்றோருக்கான கல்வி நிறுவனத்தில் லூயியஸ் சேர்ந்தார். அவருக்கு கண் பார்வை போன பிறகு தன்னைச் சுற்றியிருக்கும் அனைத்தையும் கேட்டு, தொட்டு, முகர்ந்துபார்த்து, உணர்ந்து அவை பற்றி அறிந்து கொண்டார்.

இதில் ஏற்படும் சிரமங்களை களைந்து புதிய எழுத்து முறையை கண்டறிந்தார். 6 புள்ளிகள் கொண்ட வகையிலான அவரது எழுத்து முறையை தொடக்க காலத்தில் கல்வியாளர்களும் அரசும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் சற்றும் மனம் தளராமல் தன்னை போன்ற பார்வையற்றவர்கள் மத்தியில் இந்த எழுத்தைப் பற்றி தொடர்ந்து பிரச்சாரம் செய்து கொண்டேயிருந்தார். இது பார்வையற்றவர்கள் மத்தியில் பெறும் வரவேற்பை பெற்றனர். அதுவே பிரெய்லி எழுத்து முறை. இதை கண்டுபிடித்த போது லூயிஸின் வயது 20 மட்டுமே. அதன் பின்னரே லூயிஸ் படித்த பள்ளி இயக்குனர் அவரை அதேபள்ளியில் அறிமுகப்படுத்திய தோடு பிரெய்லிக்கு அதே பள்ளியில் ஆசிரியராக பணியாற்ற சந்தர்ப்பம் வழங்கி கௌரவித்தார். இதைத்தொடர்ந்து 1829ம் ஆண்டு 6 புள்ளிகள் கொண்ட பிரெய்லி முறையின் முதல் புத்தகம் வெளியிடப்பட்டது.




**திருமதி M.I.F . சப்னா**
**விசேடகல்விநெறி ஆசிரிய மாணவி**
**(2022/2023)**

அதை பின்பற்றியே 1837ம் ஆண்டு History of France என்ற நூலை அவரது பள்ளி நிறுவாகம் வெளியிட்டது. தொடர்ந்து அறிவியல்,கணிதம் தொடர்பான பிரெய்ல் எழுத்துமுறைப் புத்தகங்களை அவர் வெளியிட்டார். பின்னர் சிறிது சிறிதாக உலகளவில் பிரெய்லி எழுத்து முறைக்கு அங்கீகாரம் கிடைத்தது. இன்று உலகம் முழுவதும் லட்சக்கணக்கான கண்பார்வையற்றவர்களுக்கு பிரெய்லி எழுத்துமுறை தான் ஞானப்பார்வையாக இருந்து வருகிறது.

தற்போதைய நவீன கால பிரெய்ல் எழுத்து முறையின் முன்னேற்றங்களை அவதானித்தோமேயானால் வங்கிகளில் ATM இல் பயன்படுத்தப்படுகிறது. கணிணிகளில் விசைப் பலகையில் பார்வையற்றோர்களுக்கு பிரெய்ல் எண்கள் எழுத்துக்கள் பயன்படுத்தப்படுகிறது. மேலும் மேலைத்தேய நாடுகளில் star hotelகளில் liftகளிலும் பயன்படுத்தப்படுகிறது. இன்னும் முன்னேற்றகரமாக பிரெயில் அச்சகங்கள் எல்லா நாடுகளிலும் எல்லா மொழி களுக்கும் ஏற்ப சாதாரண மாணவர்களுக்கு போலவே பார்வையற்ற மாணவர்களுக்கும் எல்லாப் பாடங்களுக்கும் பிரெயில் புத்தகங்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் இலங்கையில் மகரகம எனும் இடத்தில் பிரெயில் அச்சகம் அமைந்துள்ளது இதனூடாகவே இலங்கையிலுள்ள பார்வையற்ற மாணவர்களுக்கு பாடசாலை அப்பியாசப் புத்தகங்கள் பிரெயிலில் அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது. என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே உலகம் முழுவதும் உள்ள கண்பார்வை குறைபாடு உள்ளவர்களிடேயே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இந்த நாள் பிரெய்லி தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

# எமது எண்ணங்கள்

கற்க வந்தோம் கலாசாலை அல்ல
படிக்க வந்தோம் பாடசாலை அல்ல
வித்தியாசமான வித்தியாசாலைக்கு
வந்தோம்
விசித்திரமான வேடங்கள் பூண
பண்பு, பரிவு, பாசம் வளர்த்தோம்
பரிவுடனே
சிறகு விரித்துப் பறந்தோம்
சின்னஞ் சிறுவர்போல
ஆசிரிய மாணவர்கள்
சீரும் சிறப"பும் பெற்று வாழ
சிந்தையில் நிலை நிறுத்தினோம்

அன்பான அன்பர்களே
ஆசிரிய கலாசாலை நண்பர்களே
ஆசீர் பெற்று வாழ
ஆண்டவர்களால்
ஆசீர்வதிக்கப்பட்டவர்களே
இயற்கையுடன் இயைவுபட்டு வாழ
இசை மழை பொழிபவர்களே
ஈசனவன் ஈர்ந்தளித்த ஈகைச்
சுடர்களே
உங்களின் ஒளியை மென்மேலும்
பிரகாசமடைய வைப்போம்



திருமதி தே.ரவிச்சந்திரன்
ஆரம்பக்கல்விநெறி
(2023/2024)

அறிவின் சிகரங்களே
அன்புருவான வார்த்தையால்
ஆசையூட்டி அயத்தப்படுத்தும்
ஆன்மீக கர்த்தாக்களே
இதயத்தில் இடம்பிடித்து
சிகரமதில் இன்பமாய் வாழ
ஓவியம் கற்று காவியம்
படைப்போம்
என்பதைக் கருத்தில் கொண்டு
கருணை காட்டி - கரம் பிடித்து
எமை நடாத்துங்கள்
ஊக்கலும் ஆக்கமும் அளிக்கும்
உத்தமர்களே
என்னவென்றும் எம் வாழ்வில்
ஏணிப்படிகளாய் இருந்திடுங்கள்
ஏற்றம் பெற்று ஏணியில்
நாம் வாழ
ஏழ்மை உடை உடுத்தி எளிய
கோலம் பூண்ட ஏற்போம்
எம் வாழ்வில் உத்தம பணியை

# மணிவிழா நாயகர்களுக்கு கலாசாலை சமூகத்தால் உவந்தளிக்கப்பட்ட வாழ்த்துப்பா










